**MCOP.NO:75/2022**

**PW 1 :** திருமதி.கனிமொழி

நாள் : 07.03.2025

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

விபத்திற்குள்ளான டிவிஎஸ் இருசக்கர வாகனத்தில் நான், பிரியங்கா, நடராஜன் ஆகிய மூவரும் பயணம் செய்தோம் என்றால், சரிதான். இருச்ககர வாகனத்தை ஓட்டிய நடராஜனுக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்று எனக்கு தெரியாது. அந்த இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு உள்ளதா என்று எனக்கு தெரியாது. பேருந்து எங்கள் இருசக்கர வாகனத்திற்கு பின்னால் வந்தது. நாங்கள் தான் ஹெல்மெட் அணியாமலும், நடராஜனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாமலும், இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு இல்லாமலும் வாகனத்தில் அஜாக்கிரதையாக வந்து, கீழே விழுந்து எங்களுக்கு காயமானது என்றால், சரியல்ல. நடராஜன் ஓட்டி வந்த இருச்ககர வாகனத்திற்கு எந்த ஆவணமும் இல்லாததால், பின்னால் வந்த அரசு பேருந்தின் மீது பொய்யாக இழப்பீடு பெற வழக்கு போட்டோம் என்றால், சரியல்ல. பொய்யாக இழப்பீடு கோரி தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

Sd/. M.Selvam,
I Additional District Judge,
Ranipet.